ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பாரிமகளிர் நாடகம் - ஓர் அறிமுகம்

முனைவர் ப.க. மணிமேகலை
உதவிப்பேராசிரியர்
தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோயம்பேடு, சென்னை-600 107.

24

**ஆய்வு நோக்கம் :**

படைப்பாளரின் நல்ல நாடக நூலை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்துதல். மீட்டுருவாக்க நூலை சமூகம் ஆதரிக்கச் செய்தல். இந்நாடகநூலை அறிமுகப்படுத்துவது அறிமுக நோக்கம்.

**ஆய்வு சுருக்கம்:**

புறநானூறில் உள்ள பாரிமகளிரின் பாடலை மையமாக வைத்து இயற்றப்பட்ட நாடகநூல் இது. பாரி, இரண்டு மகளிர் மற்றும் ஆசிரியர் கபிலரை மையமாக வைத்து இயற்றப்பட்ட நூல். ஔவை உற்சாகமூட்டும் பாத்திரம். வேள்பாரியின் கொடைத் தன்மை கண்டு பொறாமை கொண்ட மூவேந்தர்கள், தங்கள் வயது மூப்பு தெரிந்தும், பாரிமகளிரை பெண் கேட்கின்றனர். பாரி மறுத்ததால் போரில் வெற்றி பெற முடியாமல் வஞ்சனையால் பாரியை கொன்றுவிட்டனர். தனித்து விடப்பட்ட பெண்களுக்கு மணமகன் தேட இயலாத நிலையில் கபிலர் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தார். இந்த தகவல்கள் புறநானூற்று பாடல்கள் மூலம் அறியலாம். இதை மையமாக வைத்து இயற்றப்பட்ட நாடகநூல் பாரிமகளிர். இதை அறிமுகப்படுத்துவது அறிமுக நோக்கம்.

**திறவுசொற்கள்:**

பாரிமகளிர், வேள்பாரி, கபிலர், ஔவையார், புறநானூறு பாடல் எண் 112, சங்க இலக்கியம்

**முன்னுரை:**

கலைகளின் அரசி நாடகம். மொழியும் எழுத்தும் தோன்றுவதற்கு முன்பே போலச் செய்தல் போன்று தோன்றியது நாடகம். இந்நாடகம் முதலில் கூத்து என்றும் பின்னர் இப்பெயராலும் அழைக்கப்பட்டது. நாடகத்தமிழ் இயலையும். இசையையும் தன்னுள்ளே அடக்கியது. இயற்றமிழ் நூல்கள் தோன்றிய அளவிற்கு நாடகத்தமிழ் நூல்கள் தோன்றவில்லை. அவற்றுள்ளும் வாழ்க்கை வரலாறு நாடகநூல்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

பாரிமகளிர் என்னும் நாடகநூல் பாரியின் மகளிர்களான அங்கவை, சங்கவை பற்றியது. இயற்றியவர் முனைவர் சரளா ராஜகோபாலன். ஏராளமான நூலுக்கு சொந்தக்காரர். பாரிமகளிர் என்னும்இந்நாடகநூல் இவரின் 60வது நூல். நாடகவரிசையில் முதல் நூல். புறநானூறு பாடல் எண் 112 ஐ முதன்மையாகவும், கபிலரின் பாடல்களை நூலின் இடையிலும் பெற்று உள்ளது. இவர்கள் காலத்துக் கதாப்பாத்திரங்களான கபிலர், ஔவையார் போன்றோரும் உடன் சில கற்பனைக் கதாப்பாத்திரங்களும் இடம் பெற்றுள்ளன. இந்நாடகநூல் டிசம்பர் 2005ல் ஒளிப்பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது

வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சி, சிக்கலான பிளவு போன்றவை கதைக்குக் கருவாக அமையலாம். "கதைக்கரு இயற்கையாக அமைதல் வேண்டும் நடக்கக் கூடியதே என்று நம்பத் தக்க வகையில் இயல்பாக அமையும் கருவே கதைக்கும் கவர்ச்சி தருவதாகும்.'' *(மு.வ. இலக்கிய மரபு ப.130)*

அவ்வகையில் இந்நாடகத்திற்கு கதைக்கருவாக அமைந்தது புறநானூற்று பாடல் எண் 112. இந்நாடகநூல் மொத்தம் 140 பக்கங்களை உடையது. களம் 5, காட்சி 33.

பரிதிமாற்கலைஞர் ''நாடகவியல்" என்னும் தம் நாடக இலக்கணநூலில் வடநூலார் கூறும் சந்தியான முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்ற ஐந்தினை விளக்கியுள்ளார். இக்கூற்று இந்நாடகத்தில் பொருந்தும் விதத்தினை இனி ஆராயலாம்.

**முகம்:**

பண்பட்ட நிலத்தின் அடியில் விதைக்கப்பட்ட விதையில் இருந்து இலேசான முளை தோன்றுவது போன்றது முகம் என்னும் நாடக உறுப்பாகும் *(நாடகவியல், ப.34)*. பாரிமகளிர் என்னும் இந்நாடகத்தில் முகம் என்னும் விதைப்பகுதியாக அமைவது பாரி,கபிலர் ,அங்கவை, சங்கவை இவர்களின் தமிழார்வம். கபிலரை பாடல்கள் இயற்ற சொல்லி கேட்பது போன்று நாடகம் துவங்குகிறது.

**பிரதிமுகம்:**

முளையானது இலை, தழைகளோடு, வளர்ந்து நாற்றாக நிற்பது போன்றதுபிரதிமுகமாகும். இது கருவளர்ச்சி என்றும் சுட்டப்பெறும். தரமான விதையிலிருந்து நாற்று வளர்ந்து அதை நிலத்தில் நடுவது *(நாடகவியல், ப.35)* போன்று இந்நாடகநூலில் விறலிக்கு ஆதரவளித்து அவளையே அங்கவை, சங்கவைக்கு நாட்டியம் பயிற்றுவிக்கும் ஆசிரியராக நியமிப்பது, பாரி முல்லைக்குத் தேரை அளிப்பது அதன் மூலம் அவன் புகழ் பல இடங்களில் பரவுவது, இவர்கள் கலைக்கு அளிக்கும் முக்கியத்துவம் விளக்கப்படும்.

**கருப்பம்:**

களை பல தம்மைச்சூழ நெற்பயிர் வளர்ந்து பால் கொள்வது போன்றது கருப்பமாகும். இது உச்சநிலை என்று சுட்டப்பெறும் *(நாடகவியல், ப.35)* கலைத்திருவிழா நடத்தத் திட்டமிடுவது அங்கவை, சங்கவைக்குரிய மணமகனை அத்திருவிழா மூலம் தேர்ந்தெடுக்க திட்டமிட்டு பல அரசர்களை விழாவிற்கு அழைத்தல்.

**விளைவு:**

முற்றி நின்ற கதிர்கள் சிறப்பாக வளர்ந்து மிளிர்தலும், இலங்கும் கதிர்களைக் கடிக்கும் விலங்குகளை ஓட்டி துறத்தியபின் கதிர்கள் நன்றாகப் பழுத்து தலைசாய்வது போன்றது விளைவு ஆகும் *(நாடகவியல், ப.36)*. கலைவிழாவால் பொறாமை கொண்ட மூவேந்தர்கள் பறம்பு மலை மீது படையெடுத்தல். வெற்றி பெற இயலாமையால் சூழ்ச்சியால் வெல்ல முடிவெடுத்தல்.

**துய்த்தல்:**

காய்ந்த கதிரை அறுவடை செய்து அடித்துத் தூற்றி அப்பயனை உண்டு அடைவதைப்போன்றது துய்தலாகும். இது பயன் என்றும் சுட்டப் பெறும். நாடகத்தின் இறுதிப் பகுதியாக விளங்கக்கூடியது *(நாடகவியல், ப.37)*. சேரன் தன் குறுவாளால் பாரியை கொல்லுதல். கபிலர் பாரிமகளிருக்கு மணமகன் தேர்நதெடுக்க நினைத்தல் இயலாமையால் கபிலர் உண்ணாநோன்பிருக்க முடிவெடுத்தல். பாரிமகளிர் இருவரும் ஔவையைப் போன்று திருமணம் இன்றி வாழ முடிவெடுத்தல்.

நாடக வகை: **இன்பியல் நாடகம்**

**கதை மாந்தர்கள்:**

ஒவ்வொரு நாடகமும் தலைமைப் பாத்திரம், துணைமைப் பாத்திரம் ஆகியவற்றை பெற்றிருக்கும். அந்த வகையில் பாரிமகளிர், கபிலர் ஆகியோர் முதன்மைப் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

**துணைமைப் பாத்திரங்கள்:**

இவர்கள் கதையை நகர்த்துவதற்கு முக்கியமானவர்கள் ஆனாலும் நாடகத்தின் இறுதிவரை வரவேண்டிய அவசியம் இல்லை.

மூவேந்தர்கள்: பாரியை அழித்தவர்கள்

வஞ்சிக்கோன், இருங்கோவேள்: பாரிமகளிரை மணக்க மறுத்த சிற்றரசர்கள்.

ஔவையார்: சங்க கால பெண்பாற் புலவர். அங்கவை, சங்கவைக்கு தன்னம்பிக்கை அளித்து தனித்து வாழ வழிகாட்டியவர்

பிரகத்தன்: கபிலரின் நண்பரான வடநாட்டரசன் ருத்திரன் மகன் கபிலரின் மாணவன். கதை நகர எந்தவகையிலும் உதவாதவன். கபிலர் தன் குறிஞ்சிப் பாட்டை விளக்க இவனை பயன்படுத்துவது போன்று படைக்கப்பட்டவன்.

கூலவாணிகன், பொன்வாணிகன்: பாரியின் பெருமை பேசுபவர்கள், பறம்பின் பெருமை பேசுபவர்கள்.

குப்பன், சுப்பன்: சாதாரண குடிமக்களாக இருந்தாலும் பாரிக்கு இயல்பு வாழ்க்கையை புரிய வைத்து கதை மேலும் நகர உதவியவர்கள். இவர்களின் பேச்சைக் கேட்டதற்குப் பிறகே பாரி கலைவிழா நடத்தி தன் பெண்களுக்கு மணமகன் தேட முயல்கிறார் இதுவே கதை மேலும் நகர மூலக்காரணம். இவர்கள் பகுத்தறிவு பேசுவது போன்று படைக்கப்பட்டுள்ளனர். மக்கள் கருத்துகளே ஆள்வோரை வழி நடத்துகின்றது என்ற உண்மையைக் கதைப்போக்கில் இவர்கள் மூலம் தெரிவித்துள்ளார் அந்த வகையில் இவ்விருவரின் படைப்பு கதை நகரமுக்கியமானதாக அமைகிறது.

**மீட்டுருவாக்கம்:**

மீட்டு எடுத்து மீண்டும் உருவாக்குதல் மீட்டுருவாக்கம் ஆகும் பழமையான மரபுத் தகவல்களை மீட்டு மீண்டும் புதிய படைப்பாக படைக்கப்படுவதாகும். ஒரு பிரசவத்தில் தாயிடம் இருந்து குழந்தையை மீட்டு இன்னொரு உயிராக உருவாக்குவது போன்று சங்க இலக்கியப் பாடல்களை புதிய படைப்புகளாக படைக்கும் மீட்டுருவாக்க வகையைச் சார்ந்தது இந்த பாரிமகளிர் நாடகம். கபிலரின் பாடல்களும், பாரிமகளிரின் புறநானூற்று பாடல்கள் இந்நாடகம் உருவாகக் காரணம். தாயைப் போன்று சங்க இலக்கியப் பாடல்கள் அப்படியே இருக்கும். குழந்தையைப் போன்று இந்நாடகம் புதிதாக உருவாகி உள்ளது. கபிலர் தன் மாணவனுக்குப் பாடம் எடுப்பது போன்று குறிஞ்சிப்பாட்டும் இடையில் விளக்கப்பட்டுள்ளது.

**பெண்ணீயம்:**

ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழர் பண்பாட்டை கடைபிடிக்கும் பாரியின் அரசவைக்கு ஒரு பெண் வழக்குத் தொடுப்பவளாக வருகின்றாள். அவளது மூத்த சகோதரியின் கணவனே அவளை திருமணம் செய்ய வற்புறுத்துகின்றான். விருப்பமில்லாத அவள் பாரியிடம் புகார் அளிக்கின்றாள். வேள்பாரி அந்த தன் அரசாங்க அதிகாரியை அழைத்து அறிவுரை கூறியும் மிரட்டியும் அனுப்புகிறார். அந்த பெண் விரும்பும் ஆடவனுக்கே அவளை மணமுடிக்கும்படி அறிவுரை கூறுகின்றார்.

வேள்பாரியின் மறைவுக்குப்பின் கபிலர் பாரிமகளிரை சிற்றரசர்களின் அரசவைக்கு அழைத்துச் சென்று மணம் முடித்துக் கொள்ளும்படி வேண்டுகிறார் இதனை விரும்பாத அங்கவையும், சங்கவையும் கபிலரிடம் வெளிப்படையாக தம் கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

**அங்கவை:**

ஐயா, ஏன் வாழ முடியாது? பெண் மற்றவரைச் சார்ந்துதான் வாழ வேண்டுமா.? தனித்து இயங்க முடியாதா? நிச்சயம் முடியும். எங்களுக்கு முன்னோடியாக ஔவை அம்மையார் விளங்குகிறார். அவர் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பார்.

**"சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**

**நிறைகாக்கும் காப்பே தலை"** என்று வள்ளுவரே கூறியுள்ளார். தந்தை, கணவன், மகன், தாய், அண்ணன் ஆகியோரால் ஒரு பெண்ணின் கற்பைக் காக்க முடியாது. பெண்ணால் மட்டுமே காக்க முடியும் என்று வள்ளுவரே கூறியுள்ளார். (பாரிமகளிர், பக்கம் 138).

இதனை ஏற்று கபிலரும் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கின்றார்.

**சங்கவை:**

இப்போது எங்களிடம் தன்னம்பிக்கை உள்ளது. மன்னர்களின் துணை இல்லாமல், ஆடவர்களின் துணை இல்லாமல் வாழ முடியும் என்ற நம்பிக்கை தோன்றியுள்ளது. பெண்மையை மதிக்காத ஆடவர் உலகிற்கு இது எச்சரிக்கையாக இருக்கட்டும்! பொருளையும் வல்லமையையும் மட்டுமே மதிக்கும் உலகம் திருந்தட்டும்! எங்கள் வாழ்க்கை மற்றப் பெண்களுக்குப் பாடமாக அமையட்டும்! எங்கள் தந்தையாரின் வாழ்க்கை பெற்றோர்களுக்குப் பாடமாக அமையட்டும்! (பாரிமகளிர், பக்கம் 140). இதனால் பாரிமகளிரை தன்னம்பிக்கை உள்ள பாத்திரங்களாகப் படைத்துள்ளார்.

**வித்தியாசம்:**

பாரிமகளிரின் கதை பலரால் நாடகங்களாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்நாடக ஆசிரியர் சரளா ராஜகோபாலன் அவர்கள் இறுதியில் பாரிமகளிர் தனித்து வாழ்வது போன்று காட்டியுள்ளார். இவரது கணவர் மலையமான் என்று அழைக்கப்படும் ராஜகோபாலன் அவர்கள் **உயிர்க்கொடை** என்னும் தம்முடைய கவிதை நாடகநூலில் இறுதியில் பாரிமகளிர் தன்னை மாய்த்துக்கொள்வதைப் போன்று படைத்திருப்பார்.

பாரிமகளிர் கதை அற்றைத்திங்கள் என்னும் பெயரிலும் நாடகமாக்கப்பட்டுள்ளது.

விநாயகரால் முதுமை அடைந்தவள் ஔவை என்ற புராணக்கருத்தை மறுத்துள்ளார். ஔவை வீரன் ஒருவனை விரும்பியதாகவும் அவன் போரில் இறந்த பிறகு திருமணம் இன்றி வாழ்வதாக ஔவையின் வாய்மொழி மூலமாகத் தெரிவித்துள்ளார்.

மகள்மறுத்தல் துறை, உழிஞைத்திணை, பாடாண்திணை ஆகியவற்றுக்கான விளக்கங்களைக் கதை போகிற போக்கில் மிகச் சுலபமாகப் புரிந்து கொள்ளுமாறு எழுதியிருக்கிறார். அங்கவை சங்கவை என்னும் இரட்டைக்குழந்தைகளை ஈன்றெடுக்கும் போது பாரியின் மனைவி இறந்ததாகவும் அவர் பெயர் **நறுமலர்** என்றும் கற்பனை செய்துள்ளார்.

**முடிவுரை:**

தமிழில் நாடக நூல் குறைவு என்ற குறையை நிறைவு செய்யுமாறு 'பாரி மகளிர்' நாடக நூல் அமைந்துள்ளது. இந்நாடக நூல் இவருடைய முதல் நாடக நூல் என்னும்போது பெண்ணுலகம் பெருமிதம் கொள்ளும்படியாகச் சிறந்துள்ளது.

**துணைநூல் பட்டியல்:**


- மு.வ., இலக்கிய மரபு ப.130
- பரிதிமாற்கலைஞர்., 2004, நாடகவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஐந்தாம் பதிப்பு